பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

30. 01. 2025 7. 15
வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்-

1. தேசிய கனிமவள இயக்கம் தொடர்பான மத்திய அமைச்சரவையின் முடிவு முக்கிய தொழில்களின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் என பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. பேரிடர் தடுப்பு நடவடிக்கைகளுக்காக தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கு மூவாயிரத்து 27 கோடி ரூபாயை விடுவிக்க மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தலைமையிலான உயர்நிலைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.
3. தொழிலாளர் துறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
4. தேசப்பிதா மகாத்மா காந்தியின் 77-வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.
5. தேசிய விளையாட்டுப் போட்டிகளில் 5 தங்கப் பதக்கங்களுடன் கர்நாடகா முதலிட்டத்தில் உள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

தேசிய கனிம இயக்கம் தொடர்பான மத்திய அமைச்சரவையின் முடிவு முக்கிய தொழில்களின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் என பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், முக்கிய கனிம உற்பத்தியில் சுயசார்பை எட்டுவதற்கான மிகப்பெரிய நடவடிக்கை இது என்று குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவையின் முடிவு பசுமை எரிசக்தி, பாதுகாப்பு, உள்ளிட்ட துறைகளை பெரிதும் ஊக்குவிக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

மற்றொரு பதிவில், எத்தனால் கொள்முதல் விலையை உயர்த்தும் அமைச்சரவையின் முடிவு, எத்தனால் உற்பத்தியையும், பெட்ரோலுடன் எத்தனால் கலப்பதையும் அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முடிவு கச்சா எண்ணெய் இறக்குமதியை குறைப்பதற்கு பங்களிப்பதுடன் விவசாயிகளுக்கு உதவிகரமாக அமையும் என்றும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்குவதையொட்டி புதுதில்லியில் இன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

பட்ஜெட் கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவது தொடர்பாக இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

இதனிடையே இந்த கூட்டத்தொடரில் அவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கேட்டுக் கொண்டுள்ளார்.

குடியரசுத் தலைவர் உரையுடன் இக்கூட்டத்தொடர் நாளை தொடங்கும் நிலையில், வரும் நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டை நாளை மறுநாள் மக்களவையில் நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார்.

**[]<<<>>>[]**

பேரிடர் தடுப்பு நடவடிக்கைகளுக்காக தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கு மூவாயிரத்து 27 கோடி ரூபாயை விடுவிக்க மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தலைமையிலான உயர்நிலைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழகம், தெலங்கானா, ஜார்க்கண்ட் உள்ளிட்ட 12 மாநிலங்கள் வறட்சியால் பாதிக்கப்படக் கூடிய மாநிலங்கள் என்பதால் இந்த மாநிலங்களுக்கு இரண்டாயிரத்து 22 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படுவதாக உள்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தமிழகம், ஆந்திரா,. மத்திய பிரதேசம் உள்ளிட்ட 19 மாநிலங்களில் 144 மாவட்டங்களில் காட்டுத்தீ தடுப்பு தொடர்பான திட்டங்களை நடைமுறைப்படுத்த 818 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய உயர்நிலைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

பீகார், சத்திஷ்கர், மேற்குவங்கம் உள்ளிட்ட பத்து மாநிலங்களில் மின்னல் பாதிப்புகளை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளுக்கு 186 கோடி ரூபாய் ஒதுக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பேரிடர் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு தொடர்ந்து எடுத்து வருவதாக உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகளுக்கு நடப்பு நிதி ஆண்டில் பல்வேறு மாநிலங்களுக்கு ஏற்கனவே சுமார் 25 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் இந்தியா வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு பிரல்ஹத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

பசுமை எரிசக்தி மாற்றம் தொடர்பாக இந்திய தொழில் வர்த்தகக் கூட்டமைப்பு புதுதில்லியில் ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் பேசிய அவர், இத்துறையில் இந்தியா இலக்குகளை முன்கூட்டியே அடைந்து வருகிறது என்று கூறினார்.

சூரிய மின் உற்பத்தி துறையில் 100 ஜிகாவாட் என்ற இலக்கு ஏற்கனவே எட்டப்பட்டுவிட்டதாக அவர் தெரிவீத்தார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி 2014-ஆம் ஆண்டில் 75 ஜிகாவாட்டாக இருந்தது எனவும், தற்போது 220 ஜிகாவாட்டாக அதிகரித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

2030-ஆம் ஆண்டுக்குள் புகைப்படிவம் இல்லாத எரிசக்தி உற்பத்தியை 500 ஜிகாவட் அளவுக்கு உயர்த்த இலக்கு நிர்ணயித்து அரசு செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

பிரதமரின் சூரிய சக்தி மேற்கூரை திட்டத்தின் கீழ் ஒரு கோடி வீடுகளில் சூரிய சக்தி அமைப்புகளை நிறுவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே எட்டரை லட்சம் வீடுகளில் இதற்கான பணிகள் நிடைவந்துள்ளதாகவும் திரு பிரல்ஹத் ஜோஷி கூறினார்.

**[]<<<>>>[]**

தொழிலாளர் துறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர்கள் மற்றும் செயலாளர்கள் மாநாட்டை புதுதில்லியில் நேற்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட தொழிலாளர்களின் பங்களிப்பு அவசியம் என்று அவர் கூறினார்.

தொழில் வளர்ச்சிக்கும், தொழிலாளர் நலனுக்கும் இடையே சமநிலை இருக்க வேண்டுமென்று அவர் தெரிவித்தார்.

தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு அரசு முடிவுகளை எடுத்து வருவதாகவும், மத்திய அரசின் முடிவுகளுக்கு மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

தேசப்பிதா மகாத்மாகாந்தியின் 77-வது நினைவு தினம் இன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி அஞ்சலி நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தில்லியில் மகாத்மாகாந்தி நினைவிடமான ராஜ்காட்டில் சர்வமத பிரார்த்தனை நடைபெறுகிறது.

தில்லி காந்தி அருங்காட்சியகத்தில் தேசிய ஆவண காப்பகமும், பிரஸார் பாரதியும் இணைந்து மகாத்மாகாந்தி தொடர்பான கண்காட்சிக்கு ஏற்பாடு செய்துள்ளன.

இந்நாள் தியாகிகள் தினமாகவும், தேசிய தொழுநோய் ஒழிப்பு தினமாகவும் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி மத்திய சுகாதார அமைச்சகத்தின் சார்பில் தொழுநோய் விழிப்புணர்வு பிரச்சாரமும் மேற்கொள்ளப்படுகிறது.

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் தமிழகத்தில் நாமக்கல் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் செயல்பாடுகள் காரணமாக இந்நோய் மாவட்டத்தில் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட தொழுநோய் தடுப்பு மருத்துவ பணிகள் துணை இயக்குநர் டாக்டர் ஜெயந்தினி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - ஜெயந்தினி ) -58---- செகண்ட்*

**[]<<<>>>[]**

உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் மவுனி அமாவாசையான நேற்று மட்டும் ஏழு கோடிக்கும் அதிகமானோர் புனித நீராடியுள்ளனர்.

கும்பமேளாவில் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக உத்திரபிரதேச அரசு தெரிவித்துள்ளது.

இதனிடையே நேற்று ஏற்பட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக நீதி விசாரணை நடத்த மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து ஆய்வு செய்து, அதற்கான காரணங்களை கண்டறிய மாநில தலைமைச் செயலாளரும், காவல்துறை தலைவரும் இன்று பிரயாக்ராஜ் செல்ல இருப்பதாக அவர் கூறினார்.

உயிரிழந்தோர் குடும்பத்திற்கு தலா 25 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்றும் திரு யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தெற்கு சூடானில் சிறிய வகை விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் உயிரிழந்தனர்.

சீன எண்ணெய் நிறுவனம் ஒன்று வாடகைக்கு பயன்படுத்திய அந்த விமானம், யூனிட்டி மாகாணத்திலிருந்து தலைநகர் ஜூபா நோக்கி சென்று கொண்டிருந்தபோது அந்த விமானம் விபத்துக்குள்ளானது.

சீன எண்ணெய் நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் அந்த விமானத்தில் பயணித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

தேசிய விளையாட்டுப் போட்டிகளில் ஐந்து தங்கப் பதக்கங்களுடன் கர்நாடகா முதலிடத்தில் உள்ளது.

உத்தராகண்ட் மாநிலத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் கர்நாடகா இதுவரை ஐந்து தங்கம், இரண்டு வெள்ளி என ஏழு பதக்கங்களை வென்றுள்ளது.

நான்கு தங்கம், நான்கு வெள்ளி என எட்டு பதக்கங்களுடன் மணிப்பூர் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இரண்டு தங்கம், மூன்று வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களுடன் மகாராஷ்டிரா மூன்றாவது இடத்தில் உள்ளது,

ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலகப் பதக்கங்களுடன் தமிழகம் ஐந்தாவது இடத்தில் உள்ளது.

**[]<<<>>>[]**

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் குகேஷ் பத்தாவது சுற்றில் வெற்றிபெற்று தொடர்ந்து முன்னிலையில் உள்ளார்.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அவர் நெதர்லாந்தின் மாக்ஸ் வார்மர் டாம்-ஐ வென்றார்.

***End of News***